ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2146/30 - 2019 ඔක්තෝබර් මස 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.10.24
*2146/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 1796/18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2013, ஆண்டின் 42 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. எனினும், அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக் களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : 4-3/10/2012/LRB/19.
காணி எடுத்தல் உத்தியோகத்தர் இல.: WGSWD &EIP/ACQ/DW/01
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
“மிஹிகத்த மெதுர”, காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019, ஒற்றோபர் 18.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவ, தெஹிவளை, மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் இல. 526/டீ, ஜம்புகஸ்முல்ல, 537/பி, கொகுவல கிராம அலுவலர் பிரிவில் களுபோவில, பெபிலியான ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2018.10.09 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. கொ. 9463 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள்:

**1. துண்டு இல. 58 - பீல்ட் மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 33 ஐக் கொண்ட காணியின் பகுதி - விஸ்தீரணம் : 0.0022 ஹெக்டயார்**

வடக்கு : இந்த வரைபடத்தின் துண்டு இல. 6, பீல்ட் மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 306 மற்றும் 33 ஐக் கொண்ட காணி ; கிழக்கு : பீல்ட் மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 33 ஐக் கொண்ட காணி ; தெற்கு : பீல்ட் மாவத்தை ; மேற்கு: இந்த வரைபடத்தின் துண்டு இல. 59.

11-767